**கிராமின் கிருஷி மவுசம் சேவா**

இந்திய வானிலை துறை

தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம்

கோவை, தமிழ்நாடு

# அக்ரோமெட் ஆலோசனை புல்லட்டின்

**தேதி : 28-04-2023**

**கடலூர்(தமிழ்நாடு) வானிலை முன்னறிவிப்பு - அன்று வெளியிடப்பட்ட :2023-04-28 ( அடுத்த 5 நாட்களில் 8:30 IST வரை செல்லுபடியாகும்)**

| வானிலை காரணி | 2023-04-29 | 2023-04-30 | 2023-05-01 | 2023-05-02 | 2023-05-03 |
|---|---|---|---|---|---|
| மழையளவு (மி.மீ ) | 3.0 | 3.0 | 6.0 | 8.0 | 6.0 |
| அதிக பட்ச வெப்பநிலை ( oசெ ) | 35.0 | 36.0 | 36.0 | 35.0 | 34.0 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (o செ ) | 28.0 | 27.0 | 27.0 | 26.0 | 26.0 |
| அதிக பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 80 | 80 | 80 | 80 | 80 |
| குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 50 | 50 |
| காற்றின் வேகம் (கி.மீ./மணி ) | 4 | 6 | 6 | 6 | 6 |
| காற்றின் திசை (கோணம்) | 180 | 180 | 200 | 200 | 180 |
| மேக மூட்டம் (ஆக்டா) | 7 | 8 | 7 | 8 | 8 |

## வானிலை சுருக்கம் / எச்சரிக்கை:

வரும் வாரங்களில் இலேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது. அடுத்த ஐந்து நாட்களுக்கு வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். காற்றின் ஈரப்பதம் காலை நேரங்களில் 80% ஆகவும், பகல் நேரங்களில் 50% ஆக இருக்க வாய்ப்பு உள்ளது. அதிகபட்ச வெப்பநிலை 34.0-36.0 °C ஆகவும் குறைந்தபட்ச வெப்பநிலை 26.0-28.0 °C ஆகவும் இருக்கும். காற்றின் வேகமானது மணிக்கு 4-6 கி.மீ ஆக வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

03.05.2023 முதல் 09.05.2023 வரை தமிழ்நாட்டில் மழை இயல்பை விட அதிகமாகவும், குறைந்தபட்ச வெப்பநிலை இயல்பாகவும் மற்றும் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட குறைவாகவும் இருக்கும்.

## குறுஞ்செய்தி :

| |
|---|
| வரும் வராங்களில் இலேசான மழைப்பெய்ய வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் மண்ணின் ஈரத்தன்மையை பொறுத்து நீர்பாசனம் செய்யவும். |

## பயிர் குறிப்பிட்ட ஆலோசனை:

| பயிர் | பயிர் குறிப்பிட்ட ஆலோசனை |
|---|---|
| நெல் | 1. தற்பொழுது நிலவிவரும் சூழ்நிலையில் நெல் நாற்றங்காலில் இலைப்பேன் தாக்கம் தென்பட்டால் தயாமீதாக்ஷூம் 25% WG 100 கிராம்/ எக்டர் அல்லது டைமீத்யோட் 1.5 மி.லி/லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். 2. தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக நெற்பயிரில் புகையான் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது. இதன் அறிகுறிகள் நீர்மட்டத்திற்கு மேலிருக்கும் பயிரின் அடிப்பகுதியில் இளங்குஞ்சுகள் மற்றும் முதிர்பூச்சிகள் ஒட்டிக்கொண்டிருக்கும். தாக்கப்பட்ட பயிர்கள் முற்றிலும் காய்ந்து "தீய்ந்த மாதிரி" காட்சியளிக்கும். மேலும் பயிர்கள் சாய்ந்துவிடும். இதைக் கட்டுப்படுத்த அதிகளவில் தழைச்சத்து இடுவதை தவிர்க்க வேண்டும். ஏக்கருக்கு பைமெட்ரோசின் 120 கிராம் என்ற அளவில் ஒட்டும் திரவம் (50 மிலி/ஏக்கர் மேக்னட்/டீபால்) கலந்து தெளிக்க வேண்டும். |
| எள் | 1. தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக எள் பயிரில் குருத்து இலைப்பிணைக்கும் புழுவின் தாக்கம் தென்பட்டால் அதை கட்டுப்படுத்த குயினால்பாஸ் 25 EC 2000 மிலி/எக்டர் என்ற அளவில் தெளிக்கவும். 2. தற்பொழுது நிலவிவரும் வானிலையின் காரணமாக எள் பயிரில் வேரழுகல் நோயின் தாக்கம் தென்பட்ட வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்த மண்ணில் பேசிலாஸ் சப்டிலிஸ் அல்லது டிரைக்கோடெர்மா ஆஸ்பெரெல்லம் 2.5 கிலோ/எக்டர் என்ற அளவில் 50 கிலோ தொழு உரம் அல்லது மணலுடன் கலந்து விதைத்த 30 வது நாள் இட வேண்டும். நோய் தாக்கிய பகுதியில் கார்பன்டசிம் 1.0 கிராம்/லிட்டர் என்ற அளவில் கலந்து மண்ணை நனைக்க வேண்டும். |